# இயற்கைச் சூழலில் உகந்தை முருகன் ஆலயம்

Ms. Paul Jesukumar Chrisdina Nirojini[1]
Temporary Assistant Lecturer, Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
Corresponding author's e-mail: nirojinic@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற பழம்பெரும் கோயில்களில் ஒன்றாக உகந்தை முருகன் ஆலயம் கதிர்காமத்திற்கு அடுத்தபடியாக சிங்கள தமிழ் மக்களின் வழிபாட்டுத்தலமாக மிளிர்கின்றது. ஆலயங்களின் இருப்பிடங்கள் இயற்கைச் சூழலை மையமாகக் கொண்டு காணப்படுகின்றது. இவ்வாலயமானது நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை முதலிய இயற்கை நிலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மன அமைதியின் ஒருமைப்பாட்டிற்கு இயற்கைச் சூழல் அவசியமாகின்றது. பல்சமய கலாசாரம் கொண்ட இலங்கைச் சமூகத்தினரிடையே வழிபாட்டு ரீதியில் இரு இன மக்களை ஒன்றிணைக்கின்றது. இயற்கைச் சூழலில் உகந்தை முருகன் ஆலயத்திற்குள்ள சிறப்பினையும் ஆலயமானது மக்களது வாழ்வில் பெறுகின்ற முக்கியத்துவத்தை எடுத்தியம்புவதாக இவ்வாய்வு அமைகின்றது. இயற்கையில் கிடைக்கும் பொருட்கள் பூஜைக்குப் பயன்படுத்தப்பட்டு அவை புனிதப் பொருட்களாகவும் நோக்கப்படுகின்றன. இயற்கைச் சூழலில் உகந்தை முருகன் ஆலயமென்ற இவ்வாய்வுக் கட்டுரையானது பகுப்பாய்வாக அமைந்துள்ளது. களஆய்வு, நேர்காணல்கள் என்பவற்றை முதல்நிலைத் தரவுகளாகக் கொண்டும் ஏனைய நூல்கள், கட்டுரைகள், இணையத்தள தகவல்களை இரண்டாம்நிலைத் தரவுகளாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

திறவுச் சொல் : உகந்தை முருகன் ஆலயம், இயற்கைச் சூழல், கதிர்காமம், கிழக்கிலங்கை

## 1. உகந்தை முருகன் ஆலயத்தின் இயற்கைச் சிறப்புக்கள்

கிழக்கிலங்கையில் புகழ்பெற்ற மலைக் கோயில்களில் ஒன்றாக உகந்தை முருகன் ஆலயம் காணப்படுகின்றது. காடு, வெறியாடு களம், சோலை, மரத்தடி, அம்பலம் போன்ற இடங்களில் முருகன் உறைவதாகக் கூறப்படுகின்றது. உகந்தை முருகன் ஆலயம் அம்பாறை மாவட்டத்தில் பாணம என்ற ஊரின் எல்லையில் அமைந்துள்ள குமண வனவிலங்கு சரணாலயத்தின் தொடக்க எல்லையில் அடர்ந்த வனத்திற்குள் அமைந்துள்ளது. இவ்வாலயச் சூழலானது காடு, கடல், மலை, மணல் ஆகிய நால்வகை நிலங்களையும் உள்ளடக்கிய இயற்கை அம்சங்கள் பொருந்திய இடமாக காணப்படுகின்றது.

இவ்வாலயத்திற்கு கிழக்குத் திசையில் கடல் காணப்படுகின்றது. இது வெளிநாட்டுப் பயணிகளின் வருகையை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றது. ஆலயத்தின் வட திசையில் இரு பெரும் மலைக்குன்றுகள் காணப்படுகின்றன. இதில் வள்ளி, தெய்வானை ஆலயங்கள் காணப்படுகின்றன. இதனால் இம்மலைகளை வள்ளி மலை, தெய்வானை மலை என்றும் அழைக்கின்றனர். இம்மலைகளுக்கிடையில் காணப்படும் சிறு ஓடையின் நடுவில் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன் பிரமாண்டமான வெள்ளை நாவல் மரம் ஒன்று காணப்படுகின்றது. இதுவே இவ்வாலயத்தின் தலவிருச்சமாகக் காணப்படுகின்றது.

மூலஸ்தானத்தின் தென்கிழக்குத் திசையில் இன்னுமொரு படர்ந்த மலைத்தொடர் காணப்பட்டது. 20 அடி உயரமான இம்மலைத்தொடரினை வள்ளிமலை என அழைக்கின்றனர். கடற்கரையை அண்டிக் காணப்படும் இம்மலையில் அடியார்கள் நேர்த்திக்கடன் வைப்பதற்கு கற்களைக் கொண்டு வைக்கின்றனர்.

ஆலயச்சூழல் முழுவதும் படர்ந்த நாவல் மரம், வேம்பு மரம், அத்தி மரம், ஆலமரம், திருக்கொன்றை, வாகை என நிறைந்து காணப்படுகின்றன. பிரதான ஆலயத்தை சுற்றி மதில் அமையப்பெற்றுள்ளது. வடமேல் மூலையில் மிகப்பெரிய ஆலமரம் ஒன்று உள்ளது. அதன் கீழ் புராதன நாகதம்பிரான் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

சன நடமாட்டம் குறைந்த அமைதிமிக்க இடமாக இவ்விடம் காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்புப் பிரதேசமாகவும் வனவிலங்குகள் நடமாட்டமுள்ள பகுதியாகவும் அமைந்துள்ளது. இதனால் பாரம்பரிய நிலங்கள் மந்தைகள் மேய்ச்சல் தரையாகவும் அரசாங்கத்தின் வனவளப் பகுதியை அண்மித்ததாகவும் உகந்தை ஆலயம் காணப்படுகின்றது.

தெய்வானை அம்மன் மலையடிவாரத்தில் வடதிசையில் உருண்டையான கல் ஒன்றுள்ளது. பார்ப்பதற்கு உருண்டு விழும் தன்மையுடன் அசைக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. பார்ப்பதற்கு மோதகம் போல் இருப்பதால் மோதகமலை எனவும் அழைக்கின்றனர்.

ஆலயத்தைச் சுற்றி சுமார் 30 கிணறுகளும் 07 யாத்திரை மடங்களும் காணப்படுகின்றன. மலைகளில் 2 மிகப்பெரிய நீர்ச்சுனைகள் காணப்படுகின்றன. ஆலயத்தின் வட திசையிலும் தென்திசையிலும் இரு சிறு குளங்கள் காணப்படுகின்றன.

## 2. மக்கள் வாழ்வியலோடு உகந்தை முருகன் ஆலயம்

கிழக்கிலங்கை வாழ் இந்து மக்களின் முக்கிய தெய்வங்களில் ஒன்றாக குமரக் கடவுள் காணப்படுகின்றார். குறிப்பாக மக்களது வாழ்வில் குறை தீர்க்கும் தெய்வமாக குமரக் கடவுள் போற்றப்படுகின்றார். இலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மை தென்னிந்தியாவுடன் ஆரம்பமாகின்றது. தமிழ்நாடு ஆதிச்ச நல்லூரில் பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய தாழியிலிருந்து வேல், மயில், சேவல் சின்னங்கள் கிடைத்துள்ளன (சிற்பலம்.சி.க 1996:181). இலங்கையில் அம்பாந்தோட்டை, கதிர்காமம், வவுனியா, பெரிய புளியங்குளம், அக்குறுகொட,

கந்தரோடை, பொம்பரிப்பு, அனுராதபுரம் முதலான இடங்களில் கிடைத்த நாணயங்கள், கல்வெட்டுக்கள் மூலமாக இலங்கையின் முருக வழிபாட்டுத் தொன்மையை அறிந்துகொள்ளலாம் (புஷ்பரத்தினம் 1991:38).

இலங்கையின் வட திசையிலிருந்து வருடந்தோறும் கதிர்காமத்திற்கு தல யாத்திரை செல்லும் மக்களுக்கு உகந்தை முருகன் ஆலயம் முக்கிய கேந்திரமாக அமைக்கப்பட்டது. பக்தர்கள் தமது காட்டுவழியைத் தொடங்கும் இடமாகவும் இத்தலம் அமைந்துள்ளது. உகந்தைக்கும் கதிர்காமத்திற்குமிடையிலான காட்டுவழிப் பாதையில் எவ்விதப் பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாத காரணத்தால் யாத்திரை செல்வோர் உகந்தையில் வைத்து தமக்குத் தேவையான பொருட்களை மூட்டை முடிச்சுக்களாகக் கட்டி தமது பாத யாத்திரையை தொடக்கினர் (நேர்காணல்: சிவஸ்ரீ லோகநாதன்).

உகந்கை, கதிர்காமம் என்பனவற்றில் ஓரே கால கட்டத்தில் உற்சவம் நடைபெறுவதால் அனேகமானோர் உகந்தை முருகன் ஆலயத்தை தரிசித்துவிட்டு கதிர்காமம் நோக்கிச் செல்கின்றனர். காட்டுப்பாதை திறத்தல், மூடுதல் என்பவற்றில் உகந்தை நிர்வாகம் அதிகாரம் செலுத்துகின்றது. கதிர்காம யாத்திரை போன்று பொத்துவில், பாணம மக்கள் திருவிழாக் காலங்களில் பாத யாத்திரையை நேர்த்திக்கடன், வேண்டுகோளுக்காக மேற்கொள்கின்றனர்.

உகந்தை முருகன் ஆலயத்திற்கு வடக்குத் திசையில் சன்னியாசி மலையில் விநாயகர் ஆலயமும், தெற்குத் திசையில் குமுண கபிலத்து அம்மன் ஆலயமும் காவல் தெய்வங்களாக இருப்பது போன்று அமைந்துள்ளது. உகந்தை முருகன் ஆலயத்தின் கிளை ஆலயங்களாக இவை காணப்படுகின்றன. உகந்தை முருகன் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் இவற்றைத் தரிசிப்பதும் சிறப்பாகும் (நேர்காணல்: சிவஸ்ரீ சீதாராம்).

பழங்காலந்தொட்டு விவசாயப் பெருங்குடி மக்களின் விசுவாசமான வழிபாட்டு இடமாக இருந்து வருகின்றது. மழையில்லாத காலத்தில் உகந்தைக்குச் சென்று பொங்கிப் பூசை செய்வது வழக்கமாகும். உகந்தை முருகன் ஆலயத்தில் காணப்படுகின்ற ஏழு நீர்ச்சுனைகளில் முழ்கி நீராடினால் புண்ணியமென நம்பப்படுகின்றது.

இறைவனுடைய தரிசனத்தையும் மெய்யுணர்வையும் பெறுவதற்கு பூசைகளும் விழாக்களும் விரதங்களும் நடைபெறுகின்றன. இவ்வகையான விழாக்கள் உகந்தை முருகன் ஆலயத்தில் இடம்பற்று வருகின்றன. குறிப்பாக நித்திய பூசை, வருடாந்த உற்சவம், கந்தசஷ்டி விரதம், கார்த்திகைத் தீபத் திருநாள், திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி விரதம், சித்திரைத் திருவிழா, சித்திரா பௌர்ணமி, வைகாசிப் பூரணை என்பவற்றை மட்டக்களப்பிலிருந்து பாணமை வரையான மக்கள் பயபக்தியுடன் பொறுப்பற்று நடாத்துகின்றனர் (நேர்காணல்: சிவஸ்ரீ லோகநாதன்).

கந்தசஷ்டி விரதத்தை சிறப்பிக்கும் சூரன் போர் சிறப்பான முறையில் இடம்பெறுகின்றது. உகந்தை முருகன் ஆலயத்தில் 6 நாட்கள் மக்கள் தங்கியிருந்து விரதம் மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது கந்தசஷ்டி கவசம், கும்மிப் பாடல்கள் போன்றன மன அமைதி, மனதொருநிலைப்படுத்தல், இறை வேண்டல் என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாடப்படுகின்றது. சூரனுக்கும் முருகனுக்கும் போர் இடம்பெறும் போது உகந்தை முருகன் மீது பாடப்பட்ட

பதிகங்கள் பாடப்படுவதைக் காணலாம். பூசையின் போது இயற்கைச் சூழலில் உள்ளவற்றைப் பயன்படுத்துகின்றனர். வழிபாடு முடிவடையும் போது அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் புனிதப் பொருட்களான மாவிலைகள், பூக்கள் என்பவற்றைப் பக்தர்கள் போட்டியிட்டுயிட்டு எடுத்துக் கொள்கின்றனர். இவற்றில் வேட வழிபாட்டு அம்சங்கள் பிரதிபலிப்பதைக் காணலாம் (நேர்காணல்: சிவஸ்ரீ சீதாராம்).

தற்போது உகந்தை ஆலயத்திற்கு பெருமளவு சிங்கள மக்கள் உட்சவ காலங்களில் வருகை தருகின்றனர். இதனால் தமிழர்கள் ஒருவித வழிபாட்டையும் சிங்களவர்கள் ஒருவித வழிபாட்டையும் மேற்கொள்கின்றனர்.

### 3. முடிவுரை

புராதன காலம் முதலாக இந்தியாவிலும் இலங்கையிலும் முருக வழிபாடு நிகழ்ந்தமைக்கு இலக்கியங்களும் தொல்லியல் எச்சங்களும் சான்றாக அமைகின்றன. தேசத்துக்கோயில் என்ற வகைப்பாட்டினுள் ஈழத்தின் தொன்மை வாய்ந்த கதிர்காமம் விளங்குகின்றது. இவ்வாலயத்துடன் தொடர்புபட்டவையாக கிழக்கிலங்கை முருகத்தலங்கள் விளங்குகின்றன. குறிப்பாக முருகன் ஆலயமானது கதிர்காம பாத யாத்திரிகர்களின் வருகையோடு வளர்ச்சியடைந்த ஆலயமாகக் காணப்படுகின்றது. இவ்வாலயமானது நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை முதலிய இயற்கை நிலங்களைக்கொண்டு அமைதியான இடமாக விளங்குகின்றது. இயற்கையில் கிடைக்கும் பொருட்கள் பூஜைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக சூரன் போரில் பூஜைப் பொருட்கள் புனிதப் பொருட்களாகவும் நோக்கப்படுகின்றன. கதிர்காமத்திற்கு அடுத்ததாக இந்துக்களைத் தவிர புத்த மதத்தினரும் வழிபடும் இடமாக உகந்தை முருகன் ஆலயம் மாற்றம் பெற்றுள்ளது. இரண்டு மதங்களுக்கிடையில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காட்டும் வகையில் உகந்தை முருகன் ஆலயம் இமைந்துள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

### 4. உசாத்துணை


1. சித்திவேல்.சி.பி., (1998), உகந்தை கந்தன் அறவழி அமுதம், மஞ்சலி வெளியீடு, பாண்டிருப்பு.
2. கந்கையா.வி.சி., (2013), மட்டக்களப்பு சைவக் கோயில்கள் பாகம் இரண்டு, இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,கொழும்பு.
3. புஷ்பரட்ணம்.ப., (2001), இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், பவாணி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
4. மகேஸ்வரலிங்கம்.க., (2008), மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடு, கொழும்பு.